தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள	சிபார்சுகள்
(அ)	நியமத்தின் 2 ஆவது அத்தியாயத்தின் 2.5 ஆவது பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்று அதன் நிதி கூற்றை அட்டுறு அடிப்படையில் கணக்கீடுகள் உபயோகப்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் வருமானங்கள் கணக்கீடு செய்யும் போது சீட்டை விடப்பட்ட வருமானத்துக்கு பதிலாக வருடத்தினுள் பணமாக கிடைக்கப்பெற்ற பெறுமதியை நிதி கூற்றினுள் காட்டப்பட்டதனால் வருமானங்கள் விடயம் 2க்கு உரிய வருடத்தின் வருமானம் ரூபா 31,741,336 குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன் வருமான விடயம் 8 உரிய வருடத்தின் வருமானம் ரூபா 33,223,321 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	விசேட முகாமைத்துவ குழு தீர்மானத்தின் பிரகாரம் முத்திரை கட்டணம், நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் வியாபார வரிகள் மாத்திரம் பண அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக.	நியமத்தின் பிரகாரம் வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 3 ஆவது அத்தியாயத்தின் 3.7 ஆவது பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்று தயாரித்த ஆவணங்களில் பாதீட்டுக் உட்படுத்தப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்காக நிதி கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும்	கணக்கீட்டு நியமத்தின் 3வது அத்தியாயத்தின் 3.7 ஆவது பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(இ)	நியமத்தின் 6 ஆவது அத்தியாயத்தின் 6.1(ஆ) பந்தியின் பிரகாரம் சொத்தொன்று அந்த அறிக்கை படுத்தப்படும் காலப்பகுதியை விட அதிக காலம் ஒன்றுக்காக பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுமாயின் அது நீண்ட கால சொத்துக்களாக அடையாளப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மாநகர சபையினால் மீளாய்வாண்டு வரை நூலக புத்தகங்கள் சொத்துக்களாக அடையாளப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்வதற்கும், அதன் ஆயுட்காலத்தினுள் பெறுமானத் தேய்வு மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025ஆம் வருடத்திற்கு உரிய நிதி கூற்றின்போது நூலக கணக்கீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	நியமயத்தில் காட்டப்படுகின்ற மாதிரிக்கு இணங்க 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்காக தேறிய/சொத்துக்கள் மாற்றமடைகின்ற கூற்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் ரூபா 115,554,214 ஆன ஒதுக்கங்கள் மற்றும் ஏற்பாடுகள் காட்டப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் வருடத்தில் நிறைவடைந்த கணக்குகளின் ஊடாக ஏற்பட்டுள்ள தவறுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக	நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
மாநகர சபையின் நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக 296 கட்டளை மற்றும் 300 கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற வியாபார வரி வருமானம் வருடத்தின் வியாபார வரியாக கருதுகின்ற கணக்கீட்டு கொள்கையை ஈடுபடுத்தியதன் காரணமாக 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை வியாபார வரி வருமானம் ரூபா 100,969,690 நிதி கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவ குழு தீர்மானத்தின் அடிப்படையில் வருடத்தினுள் கிடைக்கப் பெற்ற வியாபார வரி வருமானம் வருடத்தின் வியாபார வரியாக கருதி நிதி அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக.	சரியான கணக்குகளில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மீளாய்வாண்டினுள் வேலை நிறைவு செய்யப்படாத ரூபா 42,460,181 ஆன குறுக்குப் பாதைகள் மற்றும் வடிகால் வேலைகள் 20 இன் கிரயமும் ரூபா 35,183,526 ஆன வேலைகள் நிறைவு செய்யப்படாமல் நிர்மான வேலைகள் கிரயமும் மூலதனமாக்கப்பட்டதனால் சொத்துக்கள் கணக்குகள் அந்த பெறுமதியினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	2024.12.31 ஆம் திகதியில் சீட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது மூலம் அந்த வேலைகள் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மற்றும் 2025 ஆம் வருடத்தில் சீர் செய்வதாக.	சரியாக கணக்கிடப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டினுல் காண்களை சுத்தப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,096,861 ஆன கிரயமுடைய குறுக்குப் பாதைகள், பாதைகள் மற்றும் வடிகால்கள் கணக்கிற்கு மூலதனமாக்கப்பட்டதனால் அந்த சொத்துக்கள் கணக்கு சமமான பெறுமதியினால் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.	2025 ஆம் வருடத்தில் சீர் செய்யப்படுவதாக.	சரியாக கணக்குகளில் இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் கேபிள் டிவி செயல் திட்டத்தின் மூலம் அறவிடப்பட வேண்டிய வரி வாடகை ரூபா 4,500,000 நிதி கூத்துகளில் காட்டப்படாததன் காரணமாக நடைமுறை சொத்துக்கள் அந்த அளவில் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.	சபையின் முகாமைத்துவ குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு மேதகு ஆளுநரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. ஆளுநரின் பதில் கடிதத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக.	அறவிடப்பட வேண்டிய வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கடை வாடகை வருமானமான ரூபா 201,246 மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கிடப்பட்டதனால் அந்த பெறுமதியினால் வருடத்தின் மிகை கூடுதலாகவும் நடைமுறை பொறுப்புக்கள் குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.	2025ஆம் வருடத்தில் பிழைகள் சீர் செய்யப்படுவதாக	முன்னர் கிடைக்கப்பெற்ற வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	திருத்தப்பட்ட நிதி நிலைமை விபரத்தின் பிரகாரம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனம் பெறுமதி ரூபா 6,135,300,638 காணப்பட்ட போதும், கணக்காய்வின் கணக்கீட்டின் பிரகாரம் திரண்ட மிகை/(பற்றாக்குறை) ரூபா 5,463,997,883 ஆகவும், மிகையின்/ பற்றாக்குறையின் அடையாளம் காணப்படாத மூலதன செலவுகள் மானியம் ரூபா 994,130,865 ஆகவும் காணப்பட்டமையால் மொத்த உரிமம் ரூபா 6,458,128,748 ஆகும். இதன்	2025 ஆம் வருடத்தின் நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது உரிமை மூலதனம் மாற்றங்கள் கூற்றின் இடம் பெற்றுள்ள தவறுகளை சீர் செய்வதன் ஊடாக குறைபாடுகள் சீர் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

பிரகாரம் ரூபா 322,828,110 இனால் உரிமம் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.

1.6.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகள் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 54,912,936 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இணக்கப்படாததை பரிசீலித்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	நிதி கூற்றின் குறிப்பு இலக்கம் 5 இன் கீழ் மீண்டெழாத செலவுகளுக்காக அரசின் பணிகள் பௌதீக திட்டமாக ரூபா 115,554,214 கட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த தொகை ரூபா 109,340,340 ஆக காணப்பட்டதால் ரூபா 6,213,874 வேறுபாடு ஒன்று காணப்பட்டது.	2025ஆம் வருடத்தின் நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	இணக்கப்படாததை பரிசீலித்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	**மாநகர சபை நிதி நிர்வாகத்திற்குறிய கணக்கியல் விடயங்கள் தொடர்பான கட்டளைகள்**			
	(i) 373.1	கையில் உள்ள இருப்புக்களின் பெறுமதி வருடாந்த கணக்குகளில் உள்ளடக்கப்படுகின்ற பணிகளுக்காக ஒவ்வொரு வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியில் இருப்புகள் பௌதீக ரீதியாக உன்னைப் படுத்தப்பட்டு அளவு ரீதியாக அடையாளம் காணப்பட	வருடாந்த பொருள் மெய்மையாய்வு ஊடாக 2024.12.31 ஆம் திகதியில் இருப்புகள் பௌதீக ரீதியாக உண்மைப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		வேண்டிய போதிலும் 899 உருப்படிகள் உண்மைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.		
	(ii) 477.2.2	அத்திடிய கட்டிடப் பொருட்கள் களஞ்சிய சாலை முற்றத்தில் கட்டிடப் பொருட்கள் உருப்படி 4 க்கு உரிய 87.39 கியூப் மற்றும் உருப்படி 3 ற்கு உரிய 291 அலகுகள் பற்றாக்குறை ஒன்று மற்றும் உருப்படி 2 இக்கு உரிய 12.16 இது தொடர்பாக மிகையாக காணப்பட்டிருந்த போதும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024.12.31 ஆம் திகதியில் நிறைவடைந்த வருடத்திற்கான பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பற்றாக்குறைகள் தொடர்பாக சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு பரிசீலனை சபை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			
	(i) நி.பி 139 (8)	சான்று உறுதிப்படுத்தப்பட்ட வவுச்சர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் உள்ள உத்தியோகத்தர் ஒருவர், ஒவ்வொரு கொடுப்பனவின் போதும் உடனடியாக உரிய ஆவணங்களில் குறிப்பிடப்படுவதாக மற்றும் முறையாக கணக்கீடு செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட போதிலும் 2024 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்குரிய கூட்டு மொத்தம் ரூபா 37,444,588 ஆன கொடுப்பனவு வவுச்சர்கள் 04 சுக்கு காசு புத்தகத்தில் குறிப்பிடப்படாதிருந்ததுடன் அதற்கான நிரல் வெறுமையாக காணப்பட்டது.	2024 ஆம் வருட இறுதி புத்தகங்கள் வைக்கும் பிரிவில் ஏற்பட்ட வேலை பளுவின் காரணமாக மேற்குறித்த 4 வவுச்சர்களும் காசுப் புத்தகத்தில் குறிப்பிடப்படுவதற்கு தவறவிடப்பட்டிருந்ததாக.	நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	(ii) நி.பி 272 (3) (4)	2024 டிசம்பர் மாதத்திற்கு உரிய கூட்டுநத்தம் ரூபா 204,496,091 ஆன கொடுப்பனவு வவுச்சர்கள் 32 கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு சந்தர்ப்பத்தின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதனால் இந்த வௌச்சர்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதாக.	நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
	(iii) நி.பி 386 (7) மற்றும் நி.பி. 391 (ஆ)	2024 ஆம் வருடத்தின் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான கூட்டு மொத்தம் ரூபா 1,790,418,897 ஆன 1538 காசோலை உப பத்திரங்கள் காசோலை புத்தகத்திலேயே பாதுகாப்பாக வைத்திருக்கப்பட வேண்டியதற்கு பதிலாக உப பத்திரங்களை காசோலை புத்திரத்திலிருந்து வேறுபடுத்தி முறையற்ற விதத்தில் பையொன்றினுள் வைத்திருந்ததன் காரணமாக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக காசோலை உப பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கு முடியாது போயிருந்தது.	2025ஆம் வருடத்தில் இருந்து காசோலைகள் அச்சிடப்பட்டதன் பின்னர் உப பத்திரங்களை வேறுபடுத்தி மீண்டும் காசோலை இலக்கத்தின் ஒழுங்கு படி பாதுகாப்பாக வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக	நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	2018 திசெம்பர் 31 ஆம் திகதிய 04/2018 இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடக் அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 06 ஆவது பந்தி.	நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டலில் மதிப்பீட்டு முறைமைகளின் பிரகாரம் அரச காணிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் வருடத்தின் சொத்துக்கள் மெய்மை ஆய்வின் ஊடாக அடையாளப்படுத்தப்பட்ட தெஹிவலை பிரதேச செயலாளர் கோட்டத்தினுள் 209 காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நகர சபைக்கு உரிய காணிகள் மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் மூலம் தற்போது காணிகள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அந்த மதிப்பீட்டின் பிரகாரம் காணிகளை மூலதனமாக்கி 2025 நிதி கூற்றினுள் உள்ளடக்கப்படுவதாக.	சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவீனத்தை மிகைத்த வருமானம் ரூபா 1,330,378,086 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவீனத்தை மிகைத்த வருமானம் ரூபா 810,103,015 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	நடப்பு வருடத்தில் மாநகர சபையினால் மக்கள் வங்கியில் காணப்பட்ட சேமிப்பு கணக்கை மூடி இருந்த போதிலும் நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மக்கள் வங்கியில் உள்ள சேமிப்புக் கணக்கில் உள்ள மீதி, பிரதான நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டு, கணக்கு மூடப்பட நடவடிக்கை மேற்கொள்வதாக.	நிதிக் கூற்றுக்களில் வெளியிடப்பட வேண்டும்.
(ஆ)	வனரத்தின பாதையில் இருந்து பொன்சேக்கா பாதை வரையான பாதையை விரிவு படுத்துவதற்காக சபையினால் இரத்மலானை பிரதேச செயலாளர் அலுவலகத்தின் பொது வைப்பு கணக்குகளின் 2018 மார்ச் 6ஆம் தேதி வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 4,500,000 இதுவரை விளைவற்று காணப்பட்டது.	இந்த காணியை கையகப்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் காரணமாக பணி தாமதமானதாக.	உரிய பணியை முடிவுருத்த அல்லது, முடியாவிட்டால், பணத்தைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை
	(ரூபா) '000	(ரூபா) '000	(ரூபா) '000	(ரூபா) '000	(ரூபா) '000	(ரூபா) '000	(ரூபா) '000	(ரூபா) '000
வீதவரியும் வரியும்	846,966	879,875	753,555	910,129	785,505	834,504	680,471	680,471
வாடகை	20,500	14,627	39,088	9,808	15,798	20,522	29,439	13,661
உத்தரவுப் பத்திரக் கட்டணம்	10,000	9,925	8,144	_	9,325	9,530	5,204	4,326
ஏனைய வருமானம்	19,857	18,556	23,674	12,995	16,456	20,381	24,778	13,887
	897,323	922,983	824,461	932,932	827,084	884,937	739,892	712,345

2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம சேகரிக்கும் செயற்திறன் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளபடியான வீதவரிக் கணக்கின் மீதி ரூபா 763,796,919 இருந்ததுடன், அதில் ரூபா 572,513,928 அதாவது 75 சதவீதம் மீளாய்வாண்டினுல் அறவிடுவதற்குத் தவறியிருந்தது.	கொரோனா தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார சிக்கல்கள் இதுவரை நேரடியாகப இந்த வீதவரி நிலுவைக்கு பாதித்துள்ளதுடன், ஆதனங்களை பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளுக்கு சபையினால் உட்படுத்தப்பட வில்லை என்பதாக.	வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	2024 டிசம்பர் 31ஆம் திகதியில் 45,685 ஆதனங்களில் ரூபா 900,541,672 ஆன வீத வரி நிலுவையொன்று காணப்பட்டது. இந்த நிலுவையினுள் ரூபா 50,000 உம் ரூபா 100,000 ஆன பெறுமதியுள்ள 1474 ஆதனங்களில் இருந்து ரூபா 104,615,997 உம், ரூபா 100,000 வுக்கு கூடுதலான பெறுமதியுள்ள 1315 வீத வரி அலகுகளில் ரூபா 452,128,277 வும் அறவிடுவதற்கு காணப்பட்டது.	கொரோனா தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார சிக்கல்கள் இதுவரை நேரடியாகப இந்த வீதவரி நிலுவைக்கு பாதித்துள்ளதுடன், ஆதனங்களை தடை செய்யும் நடவடிக்கைகளுக்கு சபையினால் உட்படுத்தப்பட வில்லை என்பதாக.	வீதவரி நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	**கழிவுப் பொருள் வரி**		
	மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் சபைக்கு அறவிட வேண்டிய கழிவுப்பொருள் கட்டண வருமானம் ரூபா 12,204,244 ஆகும்.	2024.12.31 அன்று நிலுவை தொகையினுல் 2025.05.31 திகதியன்று அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 4,508,841 என்பதாக.	வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	**வாடகை**		
(i)	கடை வாடகை பதிவேடு, சபையிடம் காணப்படவில்லை என்பதுடன் கணினி கட்டமைப்பில் கடை வாடகை தொடர்பான தகவல்கள் பேணப்பட்டு வருவதுடன் அத்தோடு முன்னைய வருடத்தின் நிலுவையினுள் மீளாய்வாண்டினுள் கிடைக்கப் பெற்றவை மற்றும் நடப்பு ஆண்டுக்காக கிடைக்கப்பெற்றவை எவ்வளவு என்பதை வெவ்வேறாக பெற்றுக்கொள்ள முடியாது இருப்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் கடை	2025 ஜனவரி மாதம் முதல் ஏனைய கடையறை வாடகைப் பதிவுகள் சீர் செய்யப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட முடியும் என்பதாக.	தகவல்களை துல்லியமாக பேனிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	வாடகை வருமானங்கள் சேகரிக்கும் வினைத்திறன் தொடர்பாக பரிசீலித்து உறுதி செய்து கொள்ள முடியாது உள்ளது.		
(ii)	நிலுவை கடை வாடகை தொடர்பான காலப் பகுப்பாய்வு கணக்காயவிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத துடன் வருட இறுதியில் காணப்படுகின்ற நிலுவை எவ்வளவு காலத்திலிருந்து முன் கொண்டு வரப்படுகின்ற நிலுவை என்பதை பரிசீலித்து உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது உள்ளது.	கணினி அமைப்பில் முந்தைய ஆண்டின் நிலுவையினுல் மீளாய்வாண்டின் கிடைப்பணவுகள் மற்றும் நடப்பு ஆண்டிற்கான கிடைப்பணவுகள் எவ்வாறு என தனித்தனியாகப் பெற்றுக்கொள்வகற்கு 2024 டிசம்பர் வரை முடியாதது என்பதாக.	கடையறை வாடகை நிலுவைகளுக்குரிய தகவல்களை துல்லியமாக பேனிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(iii)	2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நிலுவையில் ரூபா 100,000 க்கு கூடுதலான நிலுவை காணப்படுகின்ற 42 அதனங்களில் ரூபா 10,999,055 வும் ரூபா 50,000 முதல் ரூபா 100,000 விற்கு இடையில் நிலுவை காணப்படுகின்ற 28 அதனங்களில் இருந்து ரூபா 2,094,912 உம் அறவிட்டுக் கொள்வதற்கு உள்ளது.	2024.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட நிலுவையில் இருந்து ரூபா 100,000 க்கு கூடுதலாக காணப்பட்ட 42 ஆதனங்களின் நிலுவையில் 2025.06.11ஆம் திகதியில் ரூபா 920,309.74 செழுத்தப்பட்டதுடன் ரூபா 50,000 முதல் ரூபா 100,000 விற்கு இடையில் நிலுவை காணப்படுகின்ற 28 அதனங்களில் இருந்து ரூபா 902,874.55 உம் செலுத்தப்பட்டுள்ளதாக மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத கடைகளை முத்திரை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவை வாடகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(iv)	மாநகர சபையின் நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை 313 இன் பிரகாரம், ஆதனங்கள் குத்தகைக்கு வழங்குதல் அல்லது வாடகைக்கு வழங்கும் நடவடிக்கைகளின் போது ஆரம்ப சட்ட நடவடிக்கைகள் மற்றும் கட்டளையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களின் நிறைவேற்று பிரதான அதிகாரி அல்லது நிர்வாக பிரதான அதிகாரியினால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் 10 ஆதனங்கள்	அந்த 10 ஆதனங்களில் ஒன்று ஏற்கனவே டெண்டர் விடப்பட்டு ஒப்பந்தத்துக்குள்ளாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள துடன், மற்ற 07 ஆதனங்களும் முத்திரை வைப்பதற்காக வருவாய் பரிசோதகர் பிரிவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக.	நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கியல்தொடர்பான கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	ஒப்பந்தமிடப்படாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.		
(v)	மாநகர சபையின் நிதி நிறுவனத்திற்குரிய கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை 312 இன் பிரகாரம் ஒப்பந்தத்திற்குரிய மாதாந்த வாடகை பணம் செலுத்தப்படுகின்ற மாதத்தின் 10 ஆம் தேதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய போதிலும் வருமானங்கள் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள 15 ஆதனங்களில் 12 ஆதனங்கள் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவையாக ரூபா 2,272,550 காணப்பட்டது.	2024 டிசம்பர் 31 ஆம் தேதியில் காணப்பட்ட நிலுவையில் 2025 மே 31 ஆம் திகதியாகும் போது ரூபா 651,229 ஆன தொகை ஒன்று தற்போது அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	வாடகை வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	**அனுமதிப்பத்திரக் கட்டணம்** -------------------------------------		
(i)	நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை 296 இன் பிரகாரம் அனைத்து மாநகர சபை அதிகார பிரதேசத்திலும் தொழிற்சாலை வரி மற்றும் வியாபார வரியின் கீழ் ஆதனங்கள் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அனைத்து வருடங்களிலும் உரிய பட்டியல் தயாரிக்கப்படுதல் வரிக்குரிய வருடத்தின் மார்ச் 31 ஆம் தேதிக்கு முன்னர் வருமானங்கள் பரிசோதகர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் வருடத்தின் பின்னர் சபையினால் அவ்வாறான ஆய்வு மேற்கொள்ளப்படாமல் 2023 ஆம் வருடம் வரையும் 2019 ஆம் வருடத்தின் ஆய்வு தகவல்களின் அடிப்படையில் வியாபார அனுமதி பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. 2024 வருடத்திற்கான ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கு உரிய பட்டியலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும் அளவுக்கு போதுமான வருமானங்கள் பரி சோதகர்கள் இல்லாதது என்பதாக.	கட்டளையின் பிரகாரம் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ii)	2024 ஆம் வருடத்தின் வியாபார அனுமதி பத்திரம் வழங்குவதற்கு உரிய மேற்குறித்த அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததனால் வியாபார அனுமதி பத்திர பதிவேட்டில் உள்ளடக்கப்படாதமையால் பட்டியலிடல் மேற்கொள்ளப்படாத மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத நிறுவனங்களும் 2024 வருடத்திற்காக வியாபார அனுமதி பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன்	ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படாததன் காரணமாக சரியான பெறுமதிகளை கணக்கிடுவதற்கு முடியாது போய் உள்ளதாக.	சரியாக ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அனுமதி பத்திர கட்டணம் பட்டியலிடப் பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	பட்டியலிடப்படாத நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.		
(iii)	683 வியாபார நிறுவனங்கள் அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போதிலும் அதில் 47 நிறுவனங்களுக்காக மாத்திரம் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்யப்படாத வியாபார நிறுவனங்களின் எண்ணிக்கை அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாத மொத்த வியாபார நிறுவனங்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 93 ஆகும்.	காலவரைவறையை மீறி உள்ள வியாபார நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் வியாபார அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ளாத வியாபார நிறுவனங்களுக்காக எதிர்காலத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படுவதை உயர்ந்த முன்னேற்றத்துடன் எதிர்பார்க்கப்படுவதாக.	உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.4 மிகைக் கட்டணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபார்சுகள்
மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 1995 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்திற்காக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,437,078 அறவிட வேண்டியிருந்தது.	உள்ளாட்சி ஆணையரிடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைத்தவுடன் அந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.	மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

மாநகர சபை அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மீளாய்வாண்டில் சமையலறைக் கழிவுகளை விற்பனை செய்யும் செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 19,283,580 செலவினத்தைச் செய்து 19,284	சமையலறைக் கழிவுகளை சேகரிக்கும் செயற்திட்டத்திற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட போதிலும், ஒப்பந்தம் செய்யப்பட்ட தரப்பினர் சேகரிக்கப்பட்ட கழிவுகளை முழுவதுமாக எடுத்துச்	கழிவுகளை அகற்றுவதற்கான செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	டொன் சமையலறைக் கழிவுகள் கரதியான கழிவுப் பொருள் தளத்தில் போடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், கழிவுப் பொருட்களை ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கோ அல்லது கூட்டுப்பசளை செயற்திட்டத்தை அமுல்படுத்தி பசளை விற்பனை தொடர்பிலோ சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.	செல்லவில்லை என்றும், முன்னர் உள்ளவாறே கரதியான கழிவுப்பொருள் தளத்தில் போடப்பட்டிருந்ததுடன் அதை மீண்டும் ஒரு வெளி தரப்பினரிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ள தாகவும், உரம் தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்த போதுமான நிலம் இல்லாதது திட்டத்தை செயல்படுத்துவதில் சிக்கலாக உள்ளது என்பதாக.	
(ஆ)	திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக உயிரியல் வாயு உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,500,000 உம், மீள் சுழற்சி செயற் திட்டத்தை மேம்படுத்துவதற்காக ரூபா 5,000,000 உம் பூம் டிரெக் 01உம், உழவு இயந்திரம் 05 கொள்வனவு செய்வதற்காக ரூபா 30,000,000 மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,000,000 மொத்த மூலதன கிரயத்திற்காக ரூபா 43,500,000 பதீட்டின் ஊடாக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 2,573,144 செலவிடப்பட்டு அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	உயிரியல் வாயு உற்பத்தி ஆலையை நிர்மாணிப்பதற்காக கல்கிசை மயான காணியின் பின்னால் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, செயற்திட்டத்தைத் தொடர முடியாது போனதாகவும், தேவையான உளவு இயந்திரம் கொள்வனவிற்காக தற்போது பொதுத் திறைசேரியின் ஒப்புதல் கிடைத்துள்ளதாகவும், விரைவில் அவற்றை கொள்வனவு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுவதாகவும் என்பதாக.	ஒதுக்கீடுகள் வினைத்திறனாக பயன்படுத்தி தொடர்புடைய செயற் திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபார்சுகள்
பயன்படுத்தப்படாத இணைய இணைப்புகளுக்காக 2024 ஜனவரி முதல் ஏப்ரல் வரை ரூபா 309,260 தொகை இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.	2024 ஜூன் முதல் இது பில் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு பிழை சரி செய்யப்பட்டுள்ளதாக.	செலவுகள் தொடர்பாக நல்ல கட்டுப்பாடுகளுடன் பேணப்பட வேண்டும்.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	காசோலைகளை விநியோகிக்கும் பதிவேட்டில் காசோலையின் இலக்கம் மாத்திரம் குறிப்பிடப்பட்டு இருந்தபோதிலும் உரிய கொடுப்பனவு விபரங்கள் உள்ளடங்கலான கொடுப்பனவுதாரரின் காசோலை ஒப்படைக்கப்பட்டதற்கான தகவல்கள் எதுவும் குறிப்பிடப்படாமல் கூட்டு மொத்தம் பெறுமதி ரூபா 198,770,400 ஆன 256 காசோலைகள் கணக்காய்வு திகதியான 2024 டிசம்பர் 17ஆம் தேதியில் காணப்பட்டது.	2025ஆம் வருடத்திலிருந்து காசோலைகளை விநியோகிக்கும் பதிவேட்டில் உரிய தகவல்களை அந்தந்த தினங்களில் குறித்துக்கொள்ளப்படுவதாக.	சரியான பதிவேடுகள் பிணைப்பட்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	கணினி கட்டமைப்பின் ஊடாக பெற்று தரப்படுகின்ற 2024 ஆம் வருடத்தினுள் இரத்து செய்யப்பட்ட காசோலைகள் அறிக்கையின் பிரகாரம் இரத்து செய்யப்பட்ட 30 காசோலைகள் இடையில் ரூபா 1,937,125 பெறுமதியான 13 காசோலைகள் இரத்து செய்யப்படுவதற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதன் காசோலைகள் இரத்து செய்யப்பட்ட திகதிகள் ஒழுங்காக மேற்குரித்த அறிக்கை தயாறிக்கப்பட்டிருக்கவில்லை.	2025ஆம் வருடத்தில் இருந்து இரத்து செய்யப்படுகின்ற காசோலைகளை இரத்து செய்யப்பட்டதற்கான காரணம் குறிப்பிடப்படுவதாக.	சரியாக பதிவேட்டில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	காசு புத்தகம் மற்றும் வங்கி கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள, காசோலைகள் விநியோகிக்கும் பதிவேட்டில் குறிப்பிடப்படாத 12 காசோலைகளின் கூட்டுமத்த பெறுமதி கூட்டு மொத்த பெறுமதி ரூபா 1,987,681 ஆகும்.	தற்போது காசோலைகள் அச்சிடப்பட்டு கையொப்பமிடப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே காசோலைகள் பதிவேட்டில் குறிப்பிடப்படுவதுடன் முறையான காசோலைகள் விநியோகிக்கும் பதிவேடு பேணப்பட்டு வருவதாக.	காசோலைகள் பதிவேடு சரியான முறையில் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	எஸ்.டி.எஸ். ஜயசிங்க நினைவு அரங்கில் காணப்படுகின்ற சிற்றுண்டிச் சாலையை திருத்தும் ஒப்பந்தம் ரூபா 1,522,350 (பெறுமதி சேர் வரி உள்ளடங்காத) செலவிடப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்கு அதிக காலம் கடந்திருந்த போதிலும் 2025 மே மாதம் அளவில் அதை திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சிற்றுண்டி சாலையின் வளாகத்தில் நீர் தொடர்பு துண்டிக்கப்பட்டு இருப்பதுடன் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு குறிப்பிட்ட காலம் ஒன்று கடந்திருந்ததும் இந்த தாமதத்திற்கு தாக்கம் செலுத்தி இருந்ததாக பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்டு சிற்றுண்டி சாலையை ஆரம்பிக்குமாறு குத்தககதாரருக்கு தற்போது அறிவுறுத்தப்பட்டுள்ளதாக.	சிற்றுண்டி சாலையை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

(உ)	மாநகர சபையின் 10 மொடியூல்களைக் கொண்ட ERP மென்பொருள் கட்டமைப்பு ஒன்று நிறுவுதல், பயிற்றுவித்தல் மற்றும் பேணுதல் நடவடிக்கைகளுக்காக 2016 டிசம்பர் 23ஆம் தேதி தனியார் கம்பெனி ஒன்றுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்தமிடப்பட்ட திகதியிலிருந்து 52 வாரங்களில் உள்ளடங்களாக ஒப்பந்தமிடப்பட்ட பணிகளை நிறைவு செய்து கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பணிகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை. அதன் பிரகாரம் 2018 ஏப்ரல் 26 ஆம் திகதி மற்றும் மற்றும் 2021 ஜனவரி 1ஆம் திகதிகளில் திருத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்கு முற்பட்டிருந்ததுடன் பின்னர் 2024 பிப்ரவரி 06 ஆம் திகதி மீண்டும் இருதரப்பினர்களுக்கும் இடையில் துணை ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பான தகவல்கள் கீழ்வரும் அவதானிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது		
(i)	2024 பெப்ரவரி 6ஆம் திகதியாகும் போது ERP மென்பொருள் கட்டமைப்பின் 4 மொடியூல்களும், அவ்வாறெனில் வீத வரி கட்டமைப்பு, வேறு சேவையின் மூலம் கட்டணங்களை அறவிடுதல் (Collect Fees For Miscellaneous Services and Items) மதிப்பீடு மற்றும் பெறுமதி இடல் (Valuation and Assessments) மற்றும் இருப்பு கட்டுப்பாடு ஆகிய மொடியூல்கள் மாத்திரம் நிறைவு செய்வதற்கு அவ்வாறெனில் மொத்த ஒப்பந்தத்தில் மென்பொருள் கட்டமைப்பின் 30% மாத்திரம் நிறைவு செய்வதற்காக ஒப்பந்தமிடப்பட்டு ஏழு7 வருடங்களை விட அதிக காலம் உண்டு காலம் ஒன்று சென்றிருந்தது. அதன் பிரகாரம் நிறுவனத்திற்கு மென்பொருள் விநியோகம், நிறுவுதல், பயிற்சி அளித்தல் மற்றும் பேணுதல் தொடர்பாக போதுமான அளவு சாத்தியவளம் ஒன்று காணப்படுகின்றதா என்று கணக்காய்வின் போது பிரச்சனைக் குறியதாக இருந்தது.	இந்த செயல்திட்டத்தை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட வேண்டியதுடன் தகைமை அடிப்படையில் அந்த வசதிகள் வழங்கப்படுவதற்கு மேலதிக காலம் ஒன்று கடந்துள்ளதாக.	ஒப்பந்தத்தின் பிரகாரம் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டினுள் இரு தரப்பினர்களுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட துணை ஒப்பந்தத்தில் 10 ஆவது நிபந்தனையின் பிரகாரம் மேற்கொள்வதற்கு உள்ள 10 பணிகளுக்குரிய ஒப்பந்தமிடப்பட்ட கிரயம்	2016 ஆம் ஆண்டில் ஒப்பந்தமிடப்பட்ட தொகையிலேயே நிகழ்காலத்திலும் அபிவிருத்தி செய்வதற்கு இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு	ஒப்பந்தத்தின் பிரகாரம் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை

	ரூபா 20,933,505 ஆகும். ஒப்பந்தத்தின் பிரகாரம் 2024 ஆகஸ்ட் 05ஆம் திகதியில் பணிகள் நிறைவு செய்யப்படாத ERP மென்பொருள் கட்டமைப்பை கையளிக்க வேண்டி (Sign – Off and Commissioning) இருந்ததுடன் மீளாய்வாண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் ஒப்பந்தத்தின் பிரகாரம் பணிகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை.	முற்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் உரிய பணிகளுக்காக கூடுதலான காலம் ஒன்று செலவிடப்பட்டதாக.	மேற்கொள்ளப்பட வேண்டும்.
(iii)	ERP மென்பொருள் கட்டமைப்பிற்காக 2024 டிசம்பர் 31 ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட மொத்த கிரயம் ரூபா 14,952,718 ஆக காணப்பட்ட போதிலும் மென்பொருள் சொத்துக்கள் கணக்கிற்கு ரூபா 11,364,041 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அந்த சொத்துக்கள் கணக்கு ரூபா 3,588,677 வினால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.	ஏற்பட்டுள்ள பிழை அடையாளம் காணப்பட்டுள்ளது இதை 2025 ஆம் ஆண்டின் நிதி கூற்றுகளில் சீர் செய்யப்பட உள்ளதாக.	சரியாக கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(iv)	மாநகர சபையின் ERP கட்டமைப்பிற்கு தொடர்புடைய வீத வரிகள் மொடியூலின் ஊடாக மீளாயவாண்டுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 831,600,200 சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் ரூபா 900,541,672 நிலுவை வீத வரி வருமானத்தின் உண்மை தன்மையை அந்த பிரிவினால் புத்தகங்கள் பதிவுகள் பேணப்பட்டுருக்காமையின் காரணமாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தவுடன் ERP கட்டமைப்பின் வீத வரிகள் மொடியூள்களை பரிசோதிப்பதற்கு கணக்காய்வுக்கு உட்பிரவேசிக்க அனுமதி அளிக்கப்படாததன் காரணமாக நிதி கூற்றுக்களில் காட்டப்படுகின்ற அந்த பெறுமதிகளின் உண்மை தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.	கட்டமைப்பு பயன்பாட்டின் விசேட சந்தர்ப்பங்கள் அல்லது செயற்பாடுகளுக்காக கோரப்படும் அடிப்படையில் கணக்காய்வாளர்களுக்கு கட்டமைப்பை பரிசீலிப்பதற்கு View option நுழைவை பெற்றுக் கொடுக்க முடியும் என்பதுடன், சபையினால் வழங்கப்பட வேண்டிய மேலதிக தேவைப்பாடுகள் காணப்படுமாயின் அது தொடர்பாக எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக.	ERP கட்டமைப்பின் வீத வரி மொடியூல்கள் முன்னோடித் திட்டங்கள் சந்தர்ப்பங்களில் போது புத்தகங்கள் பதிவேடுகள் என்பவற்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டினுள் டிசம்பர் 31 ஆம் தேதியில் நிதி கூற்றுக்களில காட்டப்பட்டுள்ள ரூபா 92,248,253 ஆன இருப்பு மீதியினுள் ரூபா 1,214,764 மற்றும் ரூபா 17,496,099 ஆக தீர்க்கப்படாத இருப்பு மீதிகள் 2 காணப்படுகின்றது.	மீண்டும் களஞ்சியத்துக்கு கையளிக்கும் போது அவர்களின் இருப்பு பற்றாக்குறைகள் காணப்பட்டதன் காரணமாக இந்த உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தை இடைநிறுத்தி இருப்பதுடன் எதிர்வரும் பரிசீலனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஓய்வூதிய தொகையிலிருந்து சேதத்தை அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக.	மீதிகள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்..

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மாநகர சபைக்கு உரிய ஜெய்கா செயற் திட்டத்தின் ஊடாக கிடைக்கப்பெற்றிருந்த நன்கொடைகள், நன்கொடை பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	இந்த உருப்படிகள் தொடர்பாக பூரணமான பரிசீலனை ஒன்றை மேற்கொண்டு அவற்றை பேரேட்டு மீதிகளுக்கும் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் உருப்படிகளை துரிதமாக ஏல விற்பனை செய்து களஞ்சியத்தை முழுமையாக தீர்ப்பதற்கு இயந்திரவியல் திணைக்களத்துக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக. புறப்பணிகளை புனிதமாக.	பதிவேடுகளில் குறிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மாநகர சபைக்கு உரிய ஜெயக்கா களஞ்சிய சாலை மற்றும் கராஜ் களஞ்சிய் சாலையில் இருப்பு புத்தகங்கள் பேணப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் மீளாய் வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மை ஆய்வுக்காக ஜெயிக்கா களஞ்சிய் பொறுப்பாளரினால் ஆய்வு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இருப்பு புத்தகத்தின் பிரகாரம் மீதிகள் 2023 மற்றும் 2022 பொருள் மெய்மை ஆய்வு அறிக்கை உடன் இணங்காததன் காரணமாக அடிப்படையற்ற வழங்கப்பட்ட மீதிகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஜெயிக்கா களஞ்சியத்தில் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் அடையாளம் காணப்பட்ட 142 உரு படி வகைகளுக்குரிய 290 உருப்படிகள் மேலதிகமாகவும், 102 உருப்படிகள் வகைளுக்குரிய 517 உருப்படிகள் பற்றாகுறையாகவும் காணப்பட்டது.	முழுமையாக பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு அவற்றின் பேரேட்டு புத்தகங்களில் மீதியலாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	மாநகர சபையினால் பாவனைக்குட்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்களின் திருத்த வேலைகளுக்கு தேவையான உதிரி பாகங்களின் உருப்படிகள் 42 க்கு உரிய 4563 அலகுகள் ஜெயிக்கா களஞ்சிய சாலையில் காணப்படும் போதும் அவற்றை பாவனைக்கு உட்படுத்தாமல் உருப்படிகளை கட்டளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஜெயிக்கா களஞ்சிய சாலையில் அடையாளப்படுத்தப்படுகின்ற இந்த தவறுகளை இயன்றவியல் பொறியியலாளர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் உரிய கோளாறுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	சொத்துக்கள் பயனுறுதியாக உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

(ஈ)	களஞ்சிய சாலை பொறுப்பாளராக சேவையாற்றிய உத்தியோகத்தலினால் கராஜ் களஞ்சிய சாலையின் இருப்புப் புத்தகம் பேணப்பட்டு இருக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் பொருட்கள் மெய்மை ஆய்வின்போது டிசம்பர் 31 ஆம் தேதியில் காணப்பட்ட உண்மையான மீதிகளின் உண்மை தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாது போனது	முழுமையாக பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு அவற்றின் பேரேட்டு புத்தகங்களில் மீதியலாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	இருப்பு மெய்மையாய்வு சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	ஒவ்வொரு மாத இறுதியிலும் களஞ்சிய பதிவேடு மற்றும் கணக்கு பிரிவின் அறிக்கையின் பிரகாரம் எரிபொருள் 300 லிட்டருக்கு அண்மித்த விலகலொன்று காணப்பட்ட போதிலும் அந்த விலகலை சீர் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் டீசல் களஞ்சிய சாலையில் ஒரு லிட்டர் ரூபா 286 ஆன 1,669.19 லிட்டர் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 477,388 ஆகும்.	டீசல் பம்பையின் உடைந்த தன்னை காணப்பட்டதும், டீசல் களங்சியத்தில் திரவ நிலையற்ற தன்மையின் காரணமாக ஏற்படுகின்ற சேதத்தை எதிர்காலத்தில் புதிய டீசல் பம்பெயொன்று கொள்வனவு செய்வதன் ஊடாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	சேதங்களின் முக்கியமான காரணத்தை அடையாளப்படுத்தி அந்த விலகல்கள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
2024 டிசம்பர் 31ஆம் தேதி காணப்பட்ட ஊழியர் கடன் மீது மீதியினுள் இடம் மாற்றம் பெற்றுச் சென்றுள்ள 8 ஊழியர்களிடமிருந்து ரூபா 42,865 மற்றும் இளைப்பாரி சென்ற 19 பேரிடமிருந்து ரூபா 704,849 அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. அத்தோடு இளைப்பாரிச் என்ற 24 பேரிடம் கூடுதலாக அறவிடப்பட்டுள்ள ரூபா 30,050 வை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தகவல்களை தேடிப் பார்த்து எதிர்காலத்தில் அந்தத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் படுவதாக.	கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 16(2) மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வருடாந்த நிதி கூற்றுக்கள் 2019 டிசம்பர் 24 ஆம் தேதியிட்ட 2155/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் விதிக்கப்பட்டுள்ள மேல் மாகாண பிரதேச சபைகளின் நிதி நிர்வாகம் தொடர்பான கணக்கியல் விஷயங்கள் குறித்த ஒழுங்குமுறைஇலக்கம 08 இன் படி, ஒவ்வொரு நிதியாண்டுக்கான நிதி அறிக்கைகளும் அடுத்த நிதியாண்டின் பிப்ரவரி 28 ஆம் தேதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் நிதி அறிக்கைகள் 115 நாட்கள் தாமதத்துடன் 2025 ஜூன் 30 அன்று சமர்ப்பிக்கப்பட்டன.	பதில் பெறப்படவில்லை.	கணக்கியல் விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

4.2 பாதீடு கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மீளாய்வாண்டினுள் செலவிட்டு விடையங்கள் 53 இன் கீழ் மூலதன சொத்துக்களை கையகப்படுத்துவதற்காக ரூபா 418,202,000 ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 36,312,030 மாத்திரம் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது.	விசேட அறிவுடனான உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் போது பிரச்சனைகள் தோன்றுதல் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செலவுகளை மேற்கொள்ள முடியாது போனது என்பதாக.	ஏற்பாடுகள் பயனுறுதியுடன் உபயோகப்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	சமய, விளையாட்டு, களியாட்ட நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நலன் புரி நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டினுள் சொத்துக்களை கையகப்படுத்தும், மூலதன செலவுகளாக அடையாளப்படுத்தப்பட்ட ஏற்பாடு களுக்காக ரூபா 114,502,000 வேறுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 1,778,527 செலவிடப்பட்டு நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் ரூபா 45,999 செலவிடப்பட்டு அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. நூலகம், முன் பள்ளி மற்றும்	விசேட அறிவுடனான உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் போது பிரச்சனைகள் தோன்றுதல் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செலவுகளை மேற்கொள்ள முடியாது போனது என்பதாக.	ஏற்பாடுகள் பயனுறுதியுடன் உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

	விளையாட்டு பிரிவுகளின் ஊடாக பொதுமக்களுக்கு சிறந்த சேவை ஒன்றை வழங்குவதற்காக அடையாளம் காணப்பட்டிருந்த மூலதன சொத்துக்கள் உரிய பிரிவுகளுக்கு விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(இ)	மீளாய்வாண்டினுள் செலவு விடயங்கள் 69 ஏற்பாடுகளுக்காக ரூபா 245,048,000 வில் இருந்து எவ்வித செலவொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	விசேட அறிவுடனான உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் போது பிரச்சனைகள் தோன்றுதல் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செலவுகளை மேற்கொள்ள முடியாது போனது என்பதாக.	ஏற்பாடுகள் பயனுறுதியுடன் உபயோகப்படுத்தப்பட வேண்டும்.